உளி- 1 | ஓசை-49 | மார்ச்-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| உஸ்மான் | - 4 |
| வத்திராயிருப்பு தெ சு கவுதமன் | - 5 |
| ரா.ராஜசேகர் | - 6 |
| வினோதன் | - 7 |
| மா.காளிதாஸ் | - 8 |
| அகதா | - 9 |
| கோ.லீலா | - 9 |
| மதுசூதன் | - 10 |
| வி.உ.இளவேனில் | - 10 |
| யாழ் தண்விகா | - 11 |
| கனகா பாலன் | - 12 |
| கா.ரஹ்மத்துல்லாஹ் | - 13 |
| ஜே.பிரோஸ்கான் | - 14 |
| சந்துரு | - 15 |
| மின்மினி விமலா | - 16 |
| கோவை சசிகுமார் | - 17 |
| ப.தனஞ்ஜெயன் | - 18 |
| ரிஸ்கா முக்தார் | - 19 |
| ஷெண்பா | - 20 |
| காயத்ரி ராஜசேகர் | - 21 |
| வானம்பாடி முஜாகிதீன் | - 22 |
| இரா.பூபாலன் | - 23 |
| பிரபுசங்கர் க | - 24 |
| வேலணையூர் ரஜிந்தன் | - 25 |
| தீபிகா சுரேஷ் | - 26 |
| சகா | - 27 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | - 27 |
| சத்யா மருதாணி | - 28 |
| வளவன் கரிகாலன் | - 29 |
| நயினார் | - 30 |
| குமரன்விஜி | - 31 |
| விசித்திரன் | - 32 |
| கிறிஸ்டினா அருள்மொழி | - 33 |
| சசிகலா திருமால் | - 34 |
| பூங்கோதை கனகராஜன் | - 35 |
| வீரசோழன் க.சோ. திருமாவளவன் | - 36 |
| ப்ரியா பாஸ்கரன் | - 37 |
| தி.கலையரசி | - 38 |
| கா.ந.கல்யாணசுந்தரம் | - 39 |
| தீபிகா நடராஜன் | - 39 |



**த**ன்
வசிப்பிடம் மறந்து
உன்மேல் அமரும் வண்ணத்துபூச்சியை விரட்டி
விடாதே

அது
ஒருவேளை
உன்னைப் பிரிந்த சோகத்தில்
திசையறியாது தடுமாறும்
நானாகவும் இருக்கலாம்.

கடுங் கோடை வெப்பத்தால்
உன்
மூக்குக்கும்
ஈர உதட்டுக்கும் இடையே
உருண்டோடும்
வியர்வைத் துளியை உடனே
துடைத்து விடாதே

அது பிரிவுத்துயரின்
சூடு தாங்காமல்
இரவெல்லாம் உதிர்ந்த
என்
கண்ணீராக கூட இருக்கலாம்!

❑ **உஸ்மான்**



**நே**ற்றென் கனவில்
நெடுநாட்களுக்குப்பின் வந்தது
எங்கள் பழைய கூரை வீடு...
வீடு முழுக்க
ஒருநாள் முன்பாக முட்டையுடைத்த
கோழிக்கோழிகள்
எண்ணிப்பார்த்ததில்
இருபதுக்கு மேலிருக்கும்...
மூன்று தாய்க்கோழிகள்
அனைத்தையும் புகைப்படமெடுத்தபின்
கொஞ்சம் இரையள்ளி வீசிவிட்டு
அங்கிருந்து வெளியேறுகிறேன்
அதேச்கனவில்
அந்த பெருமழை நாள் வந்தது
வீட்டை வெள்ளமும் சூழ்கிறது
தண்ணீரில் தத்தளிக்கும் குஞ்சுகளை
ஒவ்வொன்றாய் மீட்டெடுக்கிறேன்
கோழிகளையும் தூக்கிக்கொண்டு
பத்திரமாய் வெளியேறியபின்
வீடு இடிந்து வீழ்கிறது...
முன்னொரு நாள் நள்ளிரவில்
வெள்ளம் வந்ததென
அடித்தெழுப்பிய அப்பாவுக்கும்
இதே குறைந்தபட்ச
கருணையைத்தான் காட்டியது...
கான்க்ரீட்டுக்கு மாறிவிட்ட
இப்போதும்கூட
வெள்ள அறிவிப்பு வரும்போதெல்லாம்
அதே கருணையை வேண்டுகிறேன்
இன்னும் வாழும் குடிசைகளுக்காக...

❑ **வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

# சுவைகளின் கிடங்கு



இந்த வாழ்க்கை
இப்படித்தான் எப்போதும்
சுவைகளின் சேமிப்புக் கிடங்கு

இனிப்பு நிறைத்து
திகட்ட வைக்கும்
துவர்ப்பை நாவில் தடவிக்கொண்டே

துவர்ப்பின் தொடக்கமும்
உவர்ப்பின் முடிவும்
உணர்ந்து முடிப்பதற்குள்
கசப்பையோ கரிப்பையோ
சுவை அரும்புகளில் பூசும்

எரிச்சலுடன் எச்சிலை
உமிழ்ந்துவிட்டு
நாவை உள்ளிழுப்பதற்குள்
புளிப்புச் சுவை ஊறும்
வாய்முழுக்க உமிழ்நீர் பொங்க

சுவைத்துச் சுவைத்து முடித்தப் புளிப்பின்
முடிச்சுகளில் அரும்பும்
இனிப்பின் துளி
சுவை அந்தாதி போல

இந்த வாழ்க்கை
இப்படித்தான் எப்போதும்
சுவைகளின் சேமிப்புக் கிடங்கு

❑ **ரா.ராஜசேகர்**



வேர்க் கைகளை
வானளாவ பரப்பி - நீரின்
நிழலெல்லாம் நீந்திவிட்டு
ஒரு வண்ணத்தியின்
புடவையை உடுத்தும் !

கன்னுக்குட்டிகளின்
கால்களை அல்ல,
அது தட்டாண்களின்
இறெக்கைகளைத்தான்
வரமென நினைத்தாலும்,
அது ஆலத்தின்
சிகையைத்தான்
அணிய விரும்பும் !

எத்தனை இருந்தென்ன,
முளைப்பதற்கு முன்பான
முன்கதை சுருக்கத்தை
மனப்பாடம் செய்யாத
எல்லா விதைகளுக்கும்
மரமாகுதல் கானலே !

தற்காலிக வெற்றிகளை
இலையாக்கி உதிர்க்க
கற்றுக்கொள்ளுங்கள்,
பருந்துகளின் பறத்தலை
அருகில் தரிசிக்கலாம் !

❑ **வினோதன்**



**எ**ன் நாட்குறிப்பில்
குறிப்பிடும்படியாக ஏதுமில்லை.

ஒரு டிசம்பர் மாத இறுதியில்
பிரிக்கப்படாமல் கையளிக்கப்பட்ட
அதன் கடைசிப் பக்கங்கள்
முகவரி மற்றும் தொலைபேசி எண்களுக்கென
ஒதுக்கப்பட்டவை.

பிரசுரத்திற்குத் தேர்வாகாத கவிதையின் ஒரு வரி,
யாருடையதோ
கண்ணீரால் தான் அழிந்திருக்கிறது.

ஏதாவதொரு நாள், பெருக்கல் குறியால்
தனித்துவமாகத் தன்னை அடையாளப்படுத்துகிறது.


நினைவுபடுத்தலுக்காகச்
செருகி வைக்கப்பட்ட கயிறின் நுனியில்
உலர்ந்திருக்கிறது
மறக்கக்கூடாத ஞாபகம்.

நேர்செய்யப்படாமலே
மங்கிவிட்ட செலவு கணக்கிலிருந்து
விடுவித்துக் கொள்ளப் பாடுபடும் எண்
சந்தேகக் குறியீடாகவே கருதப்படுகிறது.

அட்டைக்கும் உறைக்கும் இடையே செருகி வைத்த
புகைப்படத்தில்
மாறாத புன்னகையை
இப்போதும்
கண்களால் தான் முத்தமிடுகிறேன்.

உள்நுழைய அல்லது வெளியேறத் தவிக்கும்
ஏதோவொன்று படபடக்கிறது
பிரித்த நாள் முதல்.

**மா.காளிதாஸ்**



**வா**ழ்வென்னும் ஆற்றில் தத்தளிக்கிறது மன எறும்பு
இலை பறித்துப்போட்டு காப்பாற்றத்தான் எந்த புறாவும் இல்லை

❑ **அகதா**

**க**றுப்பும் வெள்ளையுமாக
அறுபத்துநான்கு கட்டங்களை
எப்போதும் சுமந்தே திரிந்து
நிற திணை பேதமின்றி
மாறி மாறி கட்டத்திற்குள்
நகர்ந்து கழித்த வாழ்வின்
இறுதியில் மரித்த ராஜாவாகவோ
ஒற்றை ராணியாகவோ...
ஏதுமற்ற கறுப்பு வெள்ளை
கட்டத்தின் எச்சமாக நிற்கும்
யாவரையும் பார்த்து புன்னகைத்து வண்ணமாய்
பூத்துக் கிடக்கிறது
அன்றலர்ந்த மலரொன்று.

❑ **கோ.லீலா**



அவசர ஊர்தியின்
அலறலொலி
மகிழ்வுந்துகளின் ஒலிப்பான்கள்
இரு சக்கர வாகனங்களின்
பதற்றமிகு உறுமல்கள்
ஆழ்துளை இயந்திரத்தின்
இரைச்சல்கள்
சரக்கூர்திகளின்
அவசர நகர்வுகள்
இதற்கெல்லாம் நடுவே
சலனமற்ற நீர்நிலையில்
தவளைக் குரல்
கேட்டதை
மறந்திருப்பீர்களெனின்
நீங்களும் என்னைப் போல
நகரத்துழல்கிறீர்கள் ஆவீர்.

❑ **மதுசூதன்**

ஊதாங்கோல்
வழியே
உயிர்க்காற்றை ஊதுவாள்
அடுப்புக்குள்ளே அம்மா.

பசி
அணைந்து போகும்.

❑ **வி. உ. இளவேனில்**



அப்பறவைகள்
இவைகளைப் போல
இரை உண்ணுகின்றன

அப்பறவைகள்
இவைகளைப் போல
பக்கவாட்டு கம்பிகளிலும்
அடை காக்கும் சிறு மண் சட்டிக்குள்ளும்
ஓடி விளையாடுகின்றன

அப்பறவைகள்
இவைகளைப் போல
அலகுகளால் கொத்தி கடித்து
முத்தமிட்டு மகிழ்கின்றன

அப்பறவைகளுக்கு
இவைகளைப் போல
திணை சாமை வரகு
ஊற வைத்த பாசிப்பயறு
கோதுமை
நறுக்கி வைக்கப்பட்ட பழங்கள் முதலானவை
வந்து சேர்கின்றன

அப்பறவைகள் அவ்வப்போது
இவைகளைப் போல
சுனையில் நீரருந்தும் பறவைகளாக
கூண்டுக்குள் வைக்கப்பட்ட
நீர் அருந்துகின்றன

அப்பறவைகள்
இவைகளைப் போல
குளிக்காமல் இருக்கின்றன

அப்பறவைகள்
இவைகளைப் போல
இரவில் தூங்கியும் தூங்காமலும்
கம்பிகளில் அமர்ந்திருக்கின்றன

அப்பறவைகள்
இணைப் பறவை இறந்தால்
இவைகளைப் போலவே
இறந்த பறவையை அலகால்
தட்டி எழுப்புகின்றன

இப்போதைக்கு ஒரே ஆறுதல்
அப்பறவைகளும்
இவைகளைப் போல
கூண்டுக்குள் தான்
அடைக்கப் பட்டிருக்கின்றன.
இப்பறவைகள் பறக்கும்போது
அவைகளும் பறக்கும்
அவைகளும் வானம் பார்க்கும்
அவைகளும் கூண்டுக்குள் இரை தேடித் திரியும்
வலசை செல்லும்
காட்டின் வசந்தகால ஒளியை
நினைவில் வைத்துச் சாகும்

இந்தப் பறவைகள்
விடுதலை செய்யப்படுகின்ற நாளில்
அவ்வளவு மகிழ்வு
பூக்கப் பூக்க
பறந்து வானம் தொடும்

அப்போது
இப்பறவைகளின் எதிரிலிருந்த கண்ணாடியில்
அப்பறவைகளுக்கான
கூண்டு மட்டுமேயிருக்கும்

பறக்கும் இப்பறவைகளின் நிழலில்
அப் பறவைகள் தங்கள் நிழலால் கூடுகட்டும்...
போதும் அப்பறவைகளின் நகல் விருப்பம்
அவ்வளவே...!

❑ **யாழ் தண்விகா**



அந்திச் சூரியனின் சிகப்பு
வெட்கத்தின் வண்ணமாக
நினைவுகள்
காத்தாட வந்து போகும்
தனிமையில்
சிரித்துத் தொலைக்கிறேன்

வீட்டுத் திண்ணையில் பறவையொன்று
தன் இணையின்
உதிர் இறகோடு
பேசும் காதல்மொழி
காற்றில் தவழ்ந்து
கலக்கிறது என்னோடு

நானெந்தென்
புறங்கையின்
பச்சை நரம்புகளில்
பதிந்து கிடக்கும்
உந்தன் பெருவிரல் ரேகைகளுக்கு
பெயர் வைத்து பறக்கிறேன்.

❑ **கனகா பாலன்**



**கா**தலென்பது நிறைவு...

அப்போதைய காதல்
இப்போதைய காதல் என்றெல்லாம்
எதுவுமில்லை...

இருப்பதெல்லாம்
அப்போதைய மனிதர்களும்
இப்போதைய மனிதர்களும்தான்...

காதல்
யாரையும் கொச்சைப்படுத்துவதில்லை.
காதலைத்தான்
கொச்சைப்படுத்திப் போகிறோம்...

காதல்
இப்போதுவரை காதலாக
மட்டுமே இருக்கிறது...
காதலர்களில் சிலர்தான் மோகத்திற்கு
காதல் முலாம் பூசிக்கொண்டனர்...

காதல்
காலங்க காலமாய் நேசத்தை
மட்டும்தான் ஊற்றி வருகிறது.
மனிதர்கள்தான் கோப்பைகளில்
விரகத்தை நிரப்பி காதலைத்
தூவப் பழகிக்கொண்டனர்...

காதல் பிழைகளற்றது...
தனது பாவங்களை முன்னிருத்த
பயந்தவர்கள்தான் முதன்முதலில்
காதலின் மேல்
பழியிடத் துவங்கினர்...

காதல்
இப்போதும் காதலாகவே இருக்கிறது.
காதலர்கள் மட்டும்
நவீனத்துவத்துள் நுழைந்து
இளைப்பாறிக் கொண்டிருக்கின்றனர்...

காதல் பார்க்கிறது...
மானுடச் சுயநலத்தில்
தன்னுடல் துண்டுதுண்டாய்
வெட்டப்படுவதை...

காதல் சொல்கிறது...
உங்களைப் போன்றே நானும்
மாறிவிட்டால் என்பெயர்
காதலில்லை என்று...

காதல் கேட்கிறது...
என்னைக் காதலாகவே ஏற்கும்
காதலர்கள் இருக்கிறீர்களா என்று?

**கா.ரஹ்மத்துல்லாஹ்**

# பெருங் கனவு



பெருங் கனவுக்கு
இடராய் இருக்குமென்று
வெளிச்சத்தை இரவாக்குவது சிறந்ததென,
முடிவுக்கு வந்தபோது,
உறக்கத்திற்கென
வெளிச்சத்திலிருந்து இருளுக்கு
விரைவாய் மாறுகிறது கண்கள்.

அப்படியே ஆழ்ந்த உறக்கத்திலிருந்து
மெது மெதுவாக விடுபடுகிறேன்
கனவொன்றுக்குள், மீன்தொட்டியிலிருந்து
துள்ளிக்குதிக்கும் மீனைப் போல்.

பிறகு
பெருங் கனவு பாம்புகளாகவும்
சாத்தான்களாகவும்
நிறைகிறது உறக்க நிலைக்குள்.

இப்போது
சலசலக்கும் இலைகளின் நிழல் போல
மெதுவாய் பயம் அறிமுகம் செய்யப்படுகிறது.

பின்னர்
உறக்கமும் கனவும் கலையலாம்
பயம் மட்டும் அறை முழுதும்
நிறைந்து நிற்க,
நான் வெளியேறுகிறேன்
கதவுக்குப் பின்னால்
தனித்துவிடப்பட்ட இரவொன்றிலிருந்து.

இறுதியில் இருளே எனக்கு இதமாகும்
என்ற தப்பெண்ணத்திலிருந்து
விடுபடுகிறேன்.

சூரியன் எனைச் சுடுகிறது.

.

**ஜே.பிரோஸ்கான்**

# முகம் சுளிக்கும் கவிதைகள்



எல்லோரும் விரும்பும்படியான
கவிதைகளை மட்டுமே படைப்பதில்
எனக்கொன்றும் உடன்பாடில்லை...
சிலரெழுதும் கவிதைகள்
உங்களை உற்றுப் பார்க்க வைக்கலாம்...
அது பதின் பருவத்தினன்
அரைகுறையாய் பார்த்துவிட்ட
நிர்வாணத்தைப்போல
அடிக்கடி நினைவில் வந்து
மறக்கமுடியாமல் செய்யலாம்...
மனம் பிறழ்ந்தவன்
அபூர்வமாய் நோக்கும்
நேரெதிர் பார்வையைப்போல்
உங்களுக்குள் அது ஊடுருவிச் செல்லலாம்...
நழுவிய பலூனை பிடிக்க ஓடும்
குழந்தையாய் சில நிமிடம்
சில கவிதைகளின் பின்னே
நீங்கள் ஓடவும் விரும்பலாம்..
எத்தனை முறை வாசித்தும்
உட்பொருள் விளங்காமல்
எரிச்சலுடன் சிலவற்றை
இகழ்ந்தும் செல்லலாம்...
எதற்கோ பிடிக்காமல் போனவன்
எழுதிய கவிதை அழகாயிருந்தும்
அலட்சியமாய் பார்வையை விலக்கலாம்...
கவிதைகளுக்குள் இறங்கி
கவிஞனின் அசலைத் தேடாதீர்கள்
என்ற அசரீரி நெடுநாளாய்
கேட்டுக்கொண்டிருக்கிறது
கவிதையை வைத்து கவிஞனை
ஒளிவட்டம் சூடியவனென்று
ஒருபோதும் கற்பிதம் செய்யாதீர்கள்...
அவனொன்றும் புனிதனல்ல
அவன் அதிசயனுமல்ல
சில நேரம் பிறழ்வு நிலை சூடிப் பின்
மீண்டு வந்துவிடுபவன் அவ்வளவே....
எல்லோரைப்போலவே அவனும்
பல நேரங்களில் சாதரணனே...
சப்பரத்திலோ பலிபீடத்திலோ
கவிஞனை எங்கே கிடத்துவதென்று
அவனின் படைப்புகள் பார்த்துக்கொள்ளும்...
எனினும்...
எல்லோரும் விரும்பும்படியான
கவிதைகளை மட்டுமே படைப்பதில்
எனக்கொன்றும் உடன்பாடில்லை...
எழுதுவது கவிதையாய் இருக்கும் பட்சத்தில்
சிலர் முகஞ்சுளித்துச் செல்லும்
என் கவிதைகளுக்குள்
பலவந்தமாய் சரிக்கப்பட்டவனின் ஏக்கமும்
அதை மீட்பதற்கான தீர்வும்
பொதுவெளியின் ஆதங்கமாய்
அடியாழம்வரை அதற்குள்
நிறைந்திருந்தாலே போதும்
அக்கவிதை
கவிதையாய் இருக்குமென்று நம்புகிறேன்...

❑ சந்துரு

# தீட்டென்று எதுவுமில்லை



மனிதத்தை விதைக்கும் முயற்சிக்கு
ஒரே ஒரு கைக்குலுக்கல் போதும்தான்
நீட்டப்படும் கைகள்
தீட்டென்று மறுக்கப்படுவதுதான்
இங்கு வாடிக்கை
விரல் வழி நேசங்களை
பகிர்ந்து விடும் முயற்சியில்
மூர்ச்சையாகிறது மனிதம்!

வெட்டப்படா நகநுனிக் கணுக்களில்
வேர்விட்ட சாதிகளுக்கு
கிளைகள் நூறாயிரம்!
விரல் சதைகளைப் பற்றும் முன்
கீறும் உன் ஆதிக்க கிளைகளில்
வழிகிறது என் ரத்தம்!

எப்போதும் முதல் நீட்டும்
கரங்கள் எனதாகவும்
சதை கிழிக்கும் கிளைகள்
உனதாகவுமே இருக்கிறது!

எனது விரல்களில் ஒட்டியிருக்கும்
பன்முக சமத்துவத்தை
உனக்குள் பூசிவிடவே நிகழ்த்துகிறேன்
இந்த கைக்குலுக்கல்!

ஏற்றத்தாழ்வுகளை உரமாக்கிய
உனது வேர்கள்
தாக்குபிடிப்பது சிரமம் என
உன் கிளைகளுக்கு
புரிய வைக்கவே முயற்சிக்கிறேன்!

வெறிகளைத் துறந்து ஒருமுறை கரம் நீட்டு
மனிதம் பூக்கும் உன் விரல்களின் வாசம்
நாசி தொடும்!

ஆழ சுவாசி!
அதிலேயே ஆழ்ந்து போ!
ஆதி நறுமணம் அறி!
விழி திறந்து பார்!

வாழ்க்கையின் நிச்சயங்களில் ஒன்றெனவே
கிளைபரப்பும் மனிதத்தை
நாளும் சூடும் இப்பூமிக்கும்
பிறந்திருக்கும் ஒரு புதிய மணம் !

நமது பூக்களின் மகரந்தங்கள்
சூல் கொள்ளும் போது
சாதியமற்ற விதைகள்
இருவருக்கும் பொதுவாய் வீழும்!
எழும்பும் விருட்சம் யாவிலும்
பன்முக சமத்துவத்தின் வேர்
கிளை பரப்புவதை நீயே காண்பாய்!

தீட்டென்று எதுவுமில்லை
தயங்காது கைகுலுக்குவோம் வா
மனிதத்தை விதைக்கும் முயற்சிக்கு
ஒரே ஒரு கைகுலுக்கல் போதும்தான்!

**மின்மினி விமலா**



**வெ**றுமையான இலையுதிர்காலங்களில்
மௌனமாய் அழுகின்ற
இந்தச் சாலையோர மரங்களில்

ஆண்டாண்டு காலம்
நந்தவனமான சோலைவனம்
அழுவதற்கு கண்ணீர் இல்லாமல்
ஓரமாய் சிரிக்கின்றன சறுகுகள்!

சிரித்த கனவுகளும்
கற்பனைகளும் நடந்துபோன
பாதைபோலே கடந்துபோய்விடுகின்றது!

இன்று நினைவுகள்
சங்கமிக்கும் சங்கமம்தான்
இயற்கைற்ற வெறுமையாகின்றது

கற்பனைக்கும்
கனவுக்கு மரங்களின்
சுவடுகள்தான் சாட்சி!

காலப்போக்கில் சிதைத்துக்கொண்டு
இருப்பதை
எங்கோ பார்த்த ஞாபகமாய்
கடந்து போகின்றேன்
பாதசாரியாக

என்னுயிராய் நேசித்தவற்றை
கவிதை சொல்லும்
மௌனமான ஊனத்தோடு
மரமற்ற தடயங்களை

ஆம் இது நடந்து சென்ற
காலடிச் சுவட்டின்
கல்லறையான அடையாளம்தான்
சாலையும்
நாமிழந்த மரங்களும்!!!

**கோவை சசிகுமார்**

# கல்லறை வாசம்



**ம**னதில் சொட்டும் வார்த்தைகளுக்கு முன்
மண்டியிட்டுக் கிடக்கும்
நிமிட தூரங்களின்
சுனை வீழ்ச்சியாய் நகர்ந்து
ரத்த முடிச்சுகளின் வழியாய்
நிமிர்ந்து பாயும் கால முட்களே

காலத்திலிருந்து பிரிந்து
அவிழ்ந்த சுவடுகளின்
ரகசியத்தில் ஊறும்
பெருங்கிணறாய் உடல்

திணறி எழும் வார்த்தைகளும்
நிலவின் முத்தங்களில்
எரிந்து வழியும் சமவெளியில்
ஒரு ரத்த மௌனம்

கால முட்களில் சவாரி செய்து
மரண ஊற்றில் நனைந்தெழும்
ஆழமான தீராத சுடராய் உயிர்

எரிந்து அடங்கும் எரிகல்லின்
துயரத்தில் புத்துயிர் பெறும்
பிரபஞ்ச கணத்தில்
நடுங்கி அணைந்து செரிக்கும்
ஊற்றுகளின் குரல்.

❑ **ப.தனஞ்ஜெயன்**



**கொ**டுக்கத்தவறிய முத்தமொன்று
நினைவுகளின் ஓரத்தில்
கனத்துக்கொண்டிருக்கிறது

இறுதியாய்
ஒருமுறை சந்திக்க நேரிட்டிருந்தால்
இறுதியாய்
ஒருமுறை கரம் பற்ற வாய்த்திருந்தால்
இல்லை
அப்போதே
அதை கொடுக்க முடிந்திருந்தால்
இப்போதது
உயிரின் உள்ளிருந்து
பல்லிளித்துக்கொண்டிருந்திருக்காது

இன்னும்
எல்லாக்காதலும் ஒன்றென்பது போல
எல்லாக்கண்ணீரும் ஒன்றென்பது போல
எல்லா முத்தமும்
ஒன்றாகிப்போவதில்லை
என்பதை என்னால்
ஏற்க முடியாதுள்ளது

ஆக
யாருக்கோ மறுத்தக் காதலை யாரிடமோ
ஒப்புக்கொடுப்பது போல
யாருக்காகவோ சமைத்த உணவை யாருக்கோ
பரிமாறுவதுபோல
யாருக்கோ கொடுக்கத்தவறிய முத்தமொன்றை
யாருக்கோ கொடுத்திட இயலுமென்றால்
எத்தனை நலம்

அந்தோ
கொடுக்கத்தவறிய முத்தமொன்று
நினைவுகளின் ஓரத்திலிருந்தும்
இன்னும்
கனத்துக்கொண்டுதானிருக்கிறது

❑ **ரிஸ்கா முக்தார்**

# 64 கட்டங்களில் தனித்திருக்கும்ராணி



**எ**ப்போதும் போருக்குப் போகுமுன்
நேற்று நீருற்றிய கவிதைகளில்
பூத்த பூக்களைத் தொடுத்து
தலை நிறைய சூடிக்கொள்கிறாள்..

தானாக உருமாற எதிரியின் எல்லைவரை
பயமின்றி செல்ல வேண்டுமென்பதை சிப்பாய்க்கும்
கற்றுக் கொடுத்திருக்கிறாள்..

அவள் அருகாமையில் வந்து செல்கையிலெல்லாம்
மூச்சடைக்கிறது இரு ராஜாக்களுக்கும் ஒருவனுக்கு
பயத்திலும் மற்றவனுக்கு பதட்டத்திலும்..

காப்பதே அவளென்பது அறியாமல்
ஓரடியே நகரும் அதிகாரமுள்ள ராஜா
இயலாமையில் எறிகிறான் வாளொத்த சொற்களை
இவள் ஊர்சுற்றி என..

பரமபத கட்டங்கள் போல்
சதுரங்கத்தில் ஏன் பாம்புகளே
இல்லையென்ற ராணியின் கேள்விக்கு
யாரிடமும் பதிலே இல்லை..

❑ **ஷெண்பா**



அவ்வப்போது மென் நடுக்கம் வந்து போகிறது
பிடிமானமற்று கடலில் மிதப்பதாய் ஒரு அனுமானம்
மெத்த வசதியாய் மெத்தையில்
அமர்ந்திருக்கும்போதும்
உள்ளறை தாழிடும் சிறு பயம்
இருளில் வெறுமையைத் துழாவும் விரல்களின்
விசும்பல்
பேரொளியில் உடையின்றி சிக்கியதாய் ஒரு
அசூயை
“நல்லாருக்கியா?”
உன்னொரு
ஒற்றைக் குறுஞ்செய்தியில்
மீள்வேன்.

❑ **காயத்ரி ராஜசேகர்**

# அவளது மொழிப் பட்சியின் றெக்கைகள்



**மீ**ளமுடியாத
நினவுப்படுகையின்
நிழல் படியாத சொற்கள்
பலவும்

மொழியின் கிளைகளில்
சிறகுகளை
உலர்த்திக் கொள்கின்றன

அர்த்தங்கள் விரியாத
ஊமைப் படபடப்புடன்
இன்னும் சில சொற்கள்
மொட்டாகித் தவித்திருக்க

முளைக்கத்தவறிய
உயிரற்ற சொற்களை
மறைத்துவைக்க
உயிரின் கணவாய்களைத் தேடியலைகிறாள்

இரக்கம்தெரியாத
சூரியத்துகள் மனங்களை
மிதித்துவிடாமல் கடக்கும்
பிரயத்தனத்தில்

தன் வார்த்தைக் குஞ்சுகளை
சிறகுகளுக்குள்
பொத்திப் பிடித்தவாரே
இளைப்பாறும் இடம்வேண்டி

பொட்டல்காடுகளை
நோக்கிப் பறக்கின்றாள்
சப்தமின்றி,
மொழியின்உச்சம் நிச்சயம்
மொழிப்பட்சியின்
றெக்கைகளைப் பலப்படுத்தும்

❑ **வானம்பாடி முஜா**



அப்பாவை ஒரு மண் குடுவையில் அடைத்து
வெள்ளைத் துணியால்
சுற்றிக் கொடுத்தார்கள்
ஆறு நோக்கி நடந்தவன்
ஆறேழு முறை தடுமாறிவிட்டான்
குடுவைக்குள் கத்தியபடியிருந்திருப்பார்
அப்பா.
மின் மயானத்துக்கும்
ஆற்றுக்கும் இடையில்
பழகிய பாதை தான்
பால்யத்தின் நினைவில்
சவ்வுமிட்டாய் வேண்டுமா
இளநீருக்கு வண்டியை நிறுத்தவா
என்று கேட்டபடியே வந்தார்.
இவன்
கண்ணீரை பதிலாக்கிக்கொண்டே
நடக்கிறான்.
வழியில் அடகுக்கடையில் நின்று
இவனது கல்லூரிக் கட்டணத்துக்கு
அம்மாவின் கம்மல்களை
யாருக்கும் தெரியாது
அடகு வைக்கிறார்
வயல்வெளியில் கூலிக்குக்
களையெடுக்கப் போகிறேன் என்கிறார்
ஆற்றை நெருங்கியவுடன்
நீச்சல் கற்றுத்தர
சுரைக்காய் கட்டித் தள்ள முனைகிறார்
வேண்டாம்
வேண்டாம் எனக் கதறியவன்
புகைமண்டலமாகக் கருத்துக்கிடந்த
அப்பாவை அப்படியே கவிழ்த்துவிட்டான்
நானிருக்கிறேன் பயப்படாதே
குதி
குதி
என்ற அப்பா
அப்படியே ப்ளக் ப்ளக்
என அடங்கிப் போனார்

**இரா.பூபாலன்**



**தி**டீரென ஒரு
நாய்க்குட்டியின்
உயிரை உலுக்கும்
மரண ஓலம் கேட்டு
தெருவிற்கு சென்று
பார்க்கையில்
யாரோ ஒருவரின்
இருசக்கர வாகனத்தில் அடிபட்டு
காலுடைந்து
நகர முடியாமல்
அவதிப்பட்டு கொண்டிருந்தது
அந்த சப்தம் கேட்டு
எங்கிருந்தோ வந்து சேர்ந்த
அனைத்து நாய்களும்
என்ன செய்வதென்று விளங்காமல்
பரிதாப பார்வை பார்த்தபடி
வரிசையாக நின்றுக்கொண்டிருக்க
“உடனே ஆம்புலன்ஸ்க்கு
போன் பண்ணுப்பா”
என்கிறான் மழலை மகன்
இதுக்கா?? ஆம்புலன்ஸா??
பதில் சொல்லாமல்
யோசித்துக்கொண்டே இருக்கையில்
மெதுவாக எழுந்து
காலை இழுத்தபடி
மெல்ல மெல்ல
நடந்து சென்று மறைகிறது
குட்டி நாயும்
மனதில் சுரந்த மனிதமும்.....

❑ **பிரபுசங்கர் க**

# உயிர்ப்புள்ள நீர்த்துளிகள்



**நி**ழல் உதிர்க்கும் சாலை ஒன்றில்
உதிராத் துளியின் முதல் வருகை
கார் முகிலை அழைத்து வந்தது


காற்றின் மகிழ்ச்சியாய்
சுகந்தங்கள் வியாபித்த தருணம்
வான வெளியில் ஓவியச் சிறகுகள்

மலர்களும் இலைகளும்
மகிழ்ந்தசைந்து மண் மடியில்
மௌனமாய் நேசம் பகிர்ந்தன

குளிர்மையின் பாடல் ஒன்றை
இசைக்கிறது மழையின் நடனம்
இயற்கையைப் புதுப்பிக்கும்
அபரிமித ஆற்றலின் உயிர்ப்பாய்

நீர்த் துளிகள் உதிர்வதில்லை
இவ்வையத்தை உயிர்ப்பிக்கின்றன!

❑ **வேலணையூர் ரஜிந்தன்**



இதோ ஆளில்லா சாலையில் அலையாடுமிந்த
அதிகாலைப் பனியில்

நுரையீரல் நிறைக்கும் அந்த
மருதாணிப் பூ வாசத்தில்

தள்ளாடும் முதுமையில் தனிமை தொலைக்க
நடக்கும் அந்த முதியவர்களின் சிரிப்பில்

தாயின் மடி முட்டி ஒன்றாய்
பால் குடிக்கும் நான்கு நாய்க்குட்டிகளின் துள்ளலில்

மீதமிச்சிய ஆடையோடு குப்பைத்தொட்டியில்
இன்றைய வாழ்வைத் தேடும் அவனின்
வறுமையில்

அரண்மனைக்கிளியென சாளரத்தின் வழியே எட்டிப்
பார்க்கும் அவள்களின் மௌனத்தில்

கோடையில் ஆடையிழந்த மரத்தில் பருவம் தப்பிய
பவளமல்லியின் வெட்கச்சிரிப்பில்

கைகோர்த்து நடக்கும் அந்த தாத்தா பாட்டியின்
இடையில் மௌனமாய் தளும்பும் காதலில்

21ம் நூற்றாண்டின் அவசரத்தை சொல்லும்
அடுக்குமாடி வீடுகளின்
அலார ஒலியில்

என புலன்களை தீண்டும் ஏதோ ஒன்று
உணர்வுகளை உரசையில் பற்றிக்கொள்ளும் தீயில்
வெடித்து சிதறும் வார்த்தைகளில்
பூப்பெய்துகிறது ஒரு கவிதை.

❑ **தீபிகா சுரேஷ்**

# வெட்கப்பூச்சு



**வெ**ட்கத்தைக் கொஞ்சம்
ஓரங்கட்டி வை,
கண்களை மூடினால்
கனவுலகில் சஞ்சரித்து விடுகிறாய்
நேரில் இருக்கவா?
கனவிற்குள் போகவா?
என்ற குழப்பத்திற்குள்
என்னைத் தள்ளிவிட்டு...

❑ **சகா**

**இ**றந்த தேனீ
இரண்டடி நகர்கிறது...

பசியின் வலி
எறும்பின் கால்களில்.!

❑ **சுரேஷ்பாபு ராசேந்திரன்**



**வெ**ளிச்சத்தை பரப்பி செல்கிறது வாயில்
அடைத்த நெல்மணிகளோடு பனங்கருப்பட்டி
நிறக்குருவியொன்று...

கிழக்கு புறமாக மனுசர்களை ஏந்திய விமானத்தின்
இறகில் ஓரமாக ஒளிந்து வலசைப்போகும்
காட்டுப்பறவைக்கு பிரசவத்தின் வாசனை....

மாடுகள் மேய்ந்த நிலத்தில் கொத்தி
களையெடுகிறது அலகு உடைப்பட்ட கரிச்சான்
மூக்கன்
விட்டத்தில் தேடும் வெத்தளைப்போடாத
குஞ்சுகளுக்காக..

அம்மா வீட்டிலிருந்து கிளம்பும் போதெல்லாம்
“கீச்கீச்“ இரட்டைவால் ஆட்டக்காரி கட்டாயம்
வந்துவிடுவாள் வாலாட்டி விடைக்கொடுத்து டாட்டா
காட்ட....

நீரின் சிக்கனத்தை தினமும் வகுப்பாய் எடுக்கிறாள்
வற்றிப்போன கருப்பிக்காக்கா
கானலை பருகியப்படி..

❑ **சத்யா மருதாணி**



ஏதோவொன்றாய்த்
தெரிந்து
ஏதோவொன்றாய்த்
தொடர்ந்து
ஏதோவென்றாய்
முடிந்துபோகிற
நிகழ்வுகளை
யாரோவொருவராய்க்
கவனித்தும்
கடந்தும் போதலில்
இருக்கிறது
வாழ்க்கை!

❑ **வளவன் கரிகாலன்**



**வ**யதை தொடங்கும்போதும்
முடிக்கும்போதும்
கூடவே இருந்து..
வாழ்க்கை ஒரு வட்டமென்று
சொல்வதற்காகவே
இது வட்டத்திலிருந்து
இன்னும் மாறாமலிருக்கிறது.

இது சட்னியை
முத்தமிடும் போது
சாம்பார்
இதை ஆரத் தழுவும்.
ஒரு மெலோடியை
நாவில் இசைக்க
வைக்கும் இது
மீன் குழம்போடு
சல்லாபிக்கும் போது
குத்துப் பாடலாய்
நாவை சுழற்றி போட்டுவிடும்.

குழிக்குள் அடைத்து
சுடும் கொப்பறையில்
கொதிக்க வைத்தாலும்
ஆவி போவது நீருக்குத்தான்
திடமாக வரும்போது
குழிக்குள் தள்ளிய கரண்டி
எட்டிதான் நிற்கும்.

தமிழனின் பாரம்பரியத்தை
பரம்பரை பரம்பரையாக
பாதுகாத்து வரும் இது..
தமிழைப் போலவே
உலகத்தின் ஆகச்சிறந்த
உணவாக கருதப்படுகிறது.

பிட்சாவும் பர்கரும்
குளிரூட்டப்பட்ட அறையில்
பகுமானம் காட்டினாலும்
நடைபாதை கடைகளில்
சுடச்சுட கிடைக்கும்
இட்லியின் பசிக்கு
ஏழை பணக்காரன்
நாவெல்லாம் அடிமைதான்.

வாழாவெட்டியாகவே
இருந்துவிடாமல்
இறுதியாக..
பல வண்ணங்களை
தொட்டுப் பூசிக்கொண்டு
விருந்தாகிவிடுகிறது இட்லி.

❑ **நயினார்**



ஒரு மனிதக் கோமாளியாய்
மனிதனை வெட்டி ஒட்டும்போது
நீங்கள் உயிர்போனதென்று
வருந்துவதில்லை
மாறாக
கலைக்கு உயிர் வந்ததென்று
கண்களில் ஒரு கருப்பு வெள்ளை பூக்களோடு
சிரிக்கிறீர்கள்
அந்த சிரிப்பில்
என் கருப்பு வெள்ளை கண்களையும்
சேர்த்துக் கொள்கிறேன்
ஒரு மாயாவியின் சாகசத்தில்
ஒரு நேர்மை இருக்கிறது
அவன்
நான் உங்களுக்கு
“ஒரு அதிசயம் காட்டப்போகிறேன்”
என்றுதான் தொடங்குகிறான்
இதுதான் உண்மை
என்று சொல்லும் பொய்கள் அவன்
கலையிலில்லை
ஆனால்
அரசியல் பொறுக்கிகள்
அப்படியில்லை
உங்கள் அம்மாவுக்கு
யாரோ ஒருவன் தலையை
வெட்டி ஒட்டி
உங்கள் அம்மாவுக்கு
முத்தமிடும் கணவனை வரைகிறார்கள்
உங்கள் கண்கள் சும்மா இருந்து விட முடியாது.

❑ **குமரன்விஜி**



ஒருவரின் புறக்கணிப்பையும், விலகளையும்
ஏற்றுக் கொள்ளுங்கள்
சகித்து வாழ பழகிக் கொள்ளுங்கள்.

புறக்கணிப்பும், விலகுதலும் பிரபஞ்சத்தின்
ஒவ்வொரு துளி உயிரிலும் வியாபித்து கிடக்கிறது.
எனக்கு வேண்டாம் என்று மனிதன் அதை
ஒருபோதும்
புறந்தள்ள முடியாது.

மலரில் தேன் உண்ணும் பூச்சிகள் எத்தனை என்று
பலருக்கும் தெரியாது
அது
மலருக்கும் தெரியாது
பூச்சிகளுக்கும் தெரியாது.

ஒரு செடியில் மலர்ந்த
முதல் தளிர் உதிரும்போது
அந்த செடியின் மனநிலை என்னவாக இருக்கும்
என்று எனக்கு தெரியாது
ஆனால்
உதிரும் இலைகளுக்கெல்லாம்
மரங்கள்
அழுவது கிடையாது.

குஞ்சுகளை தாய்ப்பறவை
கொத்தி விரட்டும்
அல்லது
சிறகு முளைத்த பின் தானாகவே
பிரிந்து, பறந்து செல்லும்.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் புறக்கணித்து
கொள்வார்கள்
அல்லது ஒருவரால்
புறக்கணிக்கப் படுவார்கள்.

சுவாரஸ்யத்திற்கு ஒரு எல்லை உண்டு
அவை எல்லா நாளும் சுவாரசியமாக
இருப்பதில்லை
சுவாரஸ்யத்தின் முடிவில் புறக்கணிப்பிற்கும்
ஒரு வாய்ப்பு எப்போதும் உள்ளது.

புறக்கணிக்கப்படுவதற்கு பெரிதாக எந்த
காரணங்களும் தேவையில்லை
ஏதோ ஒரு செயலோ,
வார்த்தையோ
ஏதோ ஒரு பார்வையோ
அல்லது
ஏதோ ஒரு மௌனமோ போதுமானது.

நேசம் நேசிக்க படலாம்
ஆனால்
பெரும்பாலான நேசம்
புறக்கணிப்பை நோக்கியே
வந்து நிற்கும்.
நேசிக்கப்படுதலை போல
ஒவ்வொரு
புறக்கணிப்பையும்
கொண்டாடுங்கள்.

குழந்தை குமரியாகி பிறந்த வீட்டிலிருந்து
புகுந்த வீட்டுக்கு போகும்போது
அவள் தூக்கி கொஞ்சி விளையாடிய பொம்மைகள்
அழுதால்
யாருக்கு கேட்கப் போகிறது??

❑ **விசித்திரன்**

# நீ என்பது



உடலும் உயிருமல்ல
மரணம் பிரிக்க..
சொல்லும் பொருளும் நாம்...
என் கண்வழியே பார் உன்னை
எனக்குள் இருந்து...

நீ என்பது...
ஓடும் குருதி அதிர்வில் ஒளிந்திருக்கும் இயக்கம்...
சூடும் மலரின் எழில் வாசனை...
காடதிரும் ஆண்சிங்க கர்ஜனை...
ஆண்டாள் சூடிய மாலை
நோவா காலத்துப் பேழை...

எனக்குள் இருக்கும் உன்னை
உனக்கு விளக்க அவசியமில்லை...
இது வசியமல்ல வாழ்க்கை...
நினைவைத் திருப்பித்தர தேவையுமில்லை...

உன் எதும் வேண்டாம் எனக்கு
நீ போதும் நான் வாழ்வேன்
காரணம் நான் ஒரு யுகப் பூ
என் கண்ணீருக்கும் கம்பீரம் உண்டு...!!!

❑ **கிறிஸ்டினா அருள்மொழி**

# கனா கண்டேன்...




உன்னை பற்றிய எண்ண அலைகள்
இதயச் சுவற்றை மோத
உன் நினைவுகளோ
இதயமதில் தடம் பதிக்க..
மெல்லிய ரொமான்டிக்
பியானோ மியூசிக் ஒன்று
பேக்ரவுண்டில் இழையோட...

அடடா...
உந்தன் நினைவுகளும் சுகமாக மாற
ஏதோவொன்றை எதிர்பார்த்து
மனமது கிறங்கிட
இதயமோ
உன்பெயர் சொல்லியே உச்சரிக்க
காதல் மயக்கத்தில்
உன்னோடான கிறக்கத்தில்
உள்ளமது தடுமாற....

இதயத்தின் ஓசைகள்
லப்டப் இசை மறந்து
தாறுமாறாய்
சங்கீத ஸ்வரங்களை இசைக்க
என்னவோ மயக்கம் என்னுள்...
உன்மீதுக் கொண்ட
மயக்கத்திற்கும் கிறக்கத்திற்கும்
அகராதியில் காதலென்று பெயராம்...
ஆமாவா மாமா...

பட்டாம்பூச்சியின் சிறகொன்றை
கடனாய் வாங்கி கண்கள் படபடக்க
இதயமோ குறுகுறுக்க...
உந்தன் கொஞ்சிடும் பார்வைகளில்
விரக தாபமொன்று
நெஞ்சினில் ஊற்றெடுக்க...
உனை நினைத்தே கனா காண்கிறேனடா..
கருப்பழகா...

**சசிகலா திருமால்**



**நா**னொரு கதைசொல்லி...
பட்டாம்பூச்சி கதை சொல்கிறேன் குழந்தைகள்
பறந்து காட்டுகின்றன
யானை கதை சொல்கிறேன் குழந்தைகள்
தும்பிக்கை ஆட்டி காட்டுகின்றன
மான் கதை கூறிய போது
துள்ளி ஓடிப் பார்க்கின்றனர்


கதைகளின் இடையிடையே ...
தினமும்
ஆறு மணிக்கு எழுந்து
உடற்பயிற்சி செய்ய
வீடு பெருக்க
கழிவறை சுத்தம் செய்ய
காய்கறி கழுவித்தர
முட்டை ஓடு எடுக்க
சுடுநீரில் உப்பு போட்டு
வாய் கொப்பளிக்க

அலுவலகம் செல்லும் அப்பாவிற்கு தண்ணீர்
மதிய உணவு எடுத்து பையில் வைக்க
காய்கறி கீரை சத்தான உணவுகள் சாப்பிட
சொல்லிக் கொடுத்து
கலைந்த துணிகள் மடித்து வைக்க என்று
அம்மாவின் ஓயாத அடுக்களை வேலைகளில்
பகிர்ந்து கொள்ள
சொல்லித் தருகிறேன்

குழந்தைகளின் பெற்றோர்கள் என் கைபிடித்து
கதைபோல நடுவே சொல்லிக் கொடுத்த
குழந்தைகளின் நல்ல பழக்கங்களுக்கு
நன்றி கூற
உடம்பெல்லாம் செவியெல்லாம்
மகிழ்வு நிறைய
புன்னகையோடு தலையாட்டி வீடு வருகிறேன்

வரிசை கட்டி காத்துக் கிடக்கும் வேலைகளிடையே
கலைந்து கிடக்கும் போர்வை நடுவே
எத்தனை கூறியும் காலையில் எழாமல்
சாப்பிடாமல் பரீட்சை நேரத்திலும்
கவலையில்லாமல்
தூங்கும் கல்லூரி செல்லும் என் மகளைப் பார்த்து
கலங்கி நிற்கிறேன்

❑ **பூங்கோதை கனகராஜன்**



**க**ட்டாந்தரையிலாடும் ஆடு புலி ஆட்டம்
ஆளுக்கு ஒரு கை போட்டு
தாயம் சேர்த்து நாலு ஆறு சுண்ட
என்றும் கட்டங்களுக்குத் தெரிவதில்லை
பக்கத்து புஞ்சையில் இரை தின்ன குட்டியை
ஊர் பஞ்சாயத்து பங்கு வைத்த கதையை.

ஆலமரத்தின் பொந்துகளில் கால் வைத்து
உச்சியடையும் வெயிலும்
இரை தின்னச் செல்லும் மறியும்
பறவைகளின் கூடுகளைப் பறிப்பதில்லை.

பத்து மணிக்கும்
இரண்டு மணிக்கும்
எப்போதோ வரும் டவுண் பஸ்சுக்கும்
காத்திருக்கும் செல்லாயி
ஆட்டோ பிடித்து டவுணில்
வியாழன் சந்தையில் ஆட்டிற்கு
விலை பேசி வருகிறாள்.
தூரத்தில் வரும் ஆட்டோவை வெயில் பூ
வரவேற்கவே செய்கிறது.

கால் மணி அரைமணி
நேரத்தைக் கரைக்கும் கருப்பசாமி
ஆலமரப் பொந்தில் குடும்பம் நடத்தும்
கிளியை வீட்டிற்கு முகவரி மாற்றியிருந்தான்.

ஆடு புலி ஆட்டத்தின்
கடைசி தாயத்துக்காக
காத்திருக்கையில்
ஒரு மழை எல்லாவற்றையும்
நனைத்திருந்தது.

❑ **வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**



**நொ**டிகள் கரைந்தோடும்
நெடிய நாள்

மனதிற்கெட்டிய தூரம் வரை
உனது நினைவுகள்

உன்னிடமிருந்து
குறுஞ்செய்திகளில்லாத தினங்களில்
காலம் ஓடாமல் நின்றுவிட்டதென உணர்வதைத்
தடுக்க பிரயத்தனப்பட வேண்டும்

எனது தொடர்வண்டி நீளச் செய்திக்குச்
சுருக்கெழுத்திலாவது
உனது பதிலைக் காண
கைகள் காந்தமாய் இருத்தியது
அலைபேசியை

ஒவ்வொரு அலைபேசி சத்தத்திற்கும்
இரண்டு டெசிமல் கூடுதலாகத் துடிக்கும் இதயத்தை
நிறுத்திட சிவனாலும் இயலவில்லை

இதழை இதழால் உருட்டும்
தருணத்தைவிடக்
கண்கள் கண்களால் கௌவும் தருணம் பேரழகு

ஆதலால் வா எனைக்
களவாடிய உன் பேரன்புடன்
மிச்சமிருக்கும் காலத்தைக் கடந்திடலாம்
தண்டவாள இணையாக.

❑ **ப்ரியா பாஸ்கரன்**



அவள் மங்கையான போது
சமையல் பொறுப்புகளை
கொஞ்சம் கொஞ்சமாக
பயிற்றுவிக்கத் துவங்கினாள்
அம்மா.

பெண்ணுக்கு சமைக்கத் தெரியுமா?
என்ற சம்பிரதாய கேள்விக்கு
நல்லா சமைப்பாளென
புகழாரம் சூட்டி
மணமுடித்துக் கொடுத்தார் அப்பா.

புகுந்த வீட்டில்
கற்றதனைத்தும்
தவிடு பொடியாகியது
எங்க வீட்டு சமையலை
இனிமேல் கற்றுக்கொள்ளெனத்
திணித்தபோது.

தாயாகிய பிறகு
பள்ளிக்குச் சென்ற மகன்
நண்பர்களைப் போல்
அடுக்கடுக்காக கேட்க
விதவிதமாக
சமையல் குறிப்புகளைப்
பயில்கிறாள்.

கடமைகள் அனைத்தையும்
முடித்து விட்ட பின்
விடுமுறைக்கு வரும்
பேரக்குழந்தைகளுக்காக
தெரிந்த எல்லா அஸ்திரங்களையும்
உணவுப்பாத்திரத்தில்
எய்து பார்க்கிறாள்.

உனக்கு வயசாகிட்டதால
சமையல் மறந்து போச்சு பாட்டி
என்ற விமர்சனத்தின் போது தான்
அடுப்படியின் அனல் அரக்கன்
காலமெல்லாம் தன்னை எரித்த
சாம்பல் வாசத்தை
மெல்ல நுகரமுடிகிறது
அந்த பேரிளம்பெண்ணால்.

மங்கை முதல் பேரிளம்பெண் வரை

**தி.கலையரசி**



**மீ**ண்டும் மீண்டும்
கதவிடுக்கில் வந்து போகிறது
வாலறுந்த பல்லி

❑ **கா.ந.கல்யாணசுந்தரம்**

**நீ**யா எழுதின என
விழிவிரியும் நட்பிற்கும்
வரிகளில் வந்துபோகும்
அவன்களையும் அவள்களையும்
பூதக்கண்ணாடியில் தேடும்
உறவுகளுக்கும்
அழகுமா என சிலாகிக்கும்
முகமறியா நபருக்கும்
தெரிந்திருக்க வாய்ப்பில்லை
இன்னும் எழுதப்படாத
கவிதையில் தான்
நானிருக்கிறேன் என்று...

❑ **தீபிகா நடராஜன்**


படைப்பு பெருமையுடன் வழங்கும்
என்னழகே என்னுயிரே
வெளியீடு விரைவில்